**வெளிநாட்டுச் செலவாணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017 நவெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட 2045/56 இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பவற்றின் நியதிகளில், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குப் பின்வரும் வரவுகளுக்கு வசதியளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

**1.1 அனுமதிக்கப்பட்ட வரவு**

(அ) அத்தகைய ஆட்கள் ஒழுங்குவிதிகளின் நியதிகளில், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, சிறப்பு வைப்புக் கணக்குகளின் மீது விடுவிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க மற்றும் 09ஆம் இலக்க பணிப்புரைகளின் நியதிகளில் அதேகணக்கு உடமையாளர்களினால் திறந்து பேணப்படும் சிறப்பு வைப்புக் கணக்குளின் வட்டி உள்ளிட்ட முதிர்ச்சிப் பெறுகைகள்.

**மேலதிகப் பணிப்பாளர்**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**07.10.2020**